திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு

திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

தேசத்தின் தேவையான இலங்கையரின் திறன்களை அங்கீகரித்தலில் நாமும் ஒரு பங்காளியாவோம்

# வெற்றிடங்கள்

திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் (SSDP) நிலவுகின்ற கீழ்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்பும்பொருட்டு பொருத்தமான தகைமைகளையும் அனுபவங்களையும் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விஷேட குறிப்பு: ஒக்டோபர் 25, 2017 அன்று வெளியிடப்பட்ட மேற்குறிப்பிட்ட வெற்றிடத்துக்கான விளம்பரம் ரத்து செய்யப்பட்டுள்ளது.**

## மட்டம் PS3 (முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை 01/2016, 01/2016(I) இன் பிரகாரம்)

| இல | பதவி | தகைமை (கீழே 1 அல்லது 2 அல்லது 3) | தெரிவுசெய்யப்படும் முறை | மாதாந்த சம்பளம் |
|---|---|---|---|---|
| 01 | நிதி ஆய்வாளர் (வெற்றிடம் - 01) | **1)** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதும், பதவியுடன் தொடர்புடைய துறையில் பட்டம் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதும், பட்டத்துக்குச் சமமான தரத்தையுடைய தொடர்புடைய துறையில் தகைமையைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டதும், தொடர்புடைய துறையில், தொழில்சார் தகைமையைக் கொண்டிருத்தல்.<br>அத்துடன்<br>தகைமை பெற்றபின்னர் சிரேஸ்ட முகாமைத்துவ மட்டத்தில் 07 வருட அனுபவம் அடங்கலாக முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 14 வருட சேவை அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.<br>**2)** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதும், பதவியுடன் தொடர்புடைய துறையில் பட்டம் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதும், பட்டத்துக்கு சமமான தரத்தையுடைய தொடர்புடைய துறையில் தகைமையைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டதும், தொடர்புடைய துறையில், தொழில்சார் தகைமையைக் கொண்டிருத்தல்.<br>மேலும்<br>பதவியுடன் தொடர்புடைய துறையில் பட்டப்பின் பட்டம் அல்லது ஓர் அங்கீகரிக்கப்பட்ட துறைசார் நிறுவனத்தில் முழு அங்கத்துவம் பெற்றிருத்தல்.<br>அத்துடன்<br>தகைமை பெற்றபின்னர் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 12 வருட சேவை அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.<br>**3)** பதவியுடன் தொடர்புடைய துறையில் அகில இலங்கை நாடளாவிய அரசசேவையில் 1ஆம் வகுப்பு உத்தியோகத்தராகவோ அல்லது அதற்கு ஒப்பான தரத்தினைக் கொண்டிருத்தல்.<br>அத்துடன்<br>1ஆம் வகுப்பு பதவியில் ஆகக் குறைந்தது 11 வருட சேவை அனுபவத்தினைக் கொண்டிருத்தல். | தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர். | ரூபா 180,000.00 + வாழ்க்கைச் செலவுப் படிகள் |

**குறிப்பு**: குறித்த ஒவ்வொரு பதவிக்குமுரிய பதவி விதந்துரைப்புக்களை (TORs) திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட இணையத்தில் www.ssdd.lk பதிவிறக்கம் செய்யமுடியும்.

**வயது**: 04.12.2017 ம் திகதியில் 64 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

சம்பள அளவுத்திட்டமானது 24.03.2016 ஆம் திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 01/2016 இனை அடிப்படையாகக்கொண்டது. இதன்படி அகில இலங்கை நாடளாவிய அரசசேவைகளிலிருந்து இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு தற்போதைய சம்பளம் மற்றும் உரித்துடையவைகளுக்கு மேலதிகமாக நிகழ்ச்சித்திட்டத்தில் நியமனம் பெறவுள்ள பதவிக்குரிய அடிப்படைச் சம்பளத்தின் 50% உம் வழங்கப்படும். மேலும் அரசசேவைகளில் இல்லாது நியமிக்கப்படுபவர்களுக்குரிய சம்பளம் அந்தந்த பதவிகளுக்குரியவாறு மேலே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

**சேவை நிபந்தனைகள்:**

அகில இலங்கை நாடளாவிய அரசசேவைகளிலிருந்து இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர்கள் சேவை இடமாற்ற அடிப்படையிலும் அரசசேவைகளில் இல்லாது தெரிவுசெய்யப்படுபவர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் நியமிக்கப்படுவர். அனைத்து நியமனங்களும் ஆரம்பத்தில் ஒரு வருடகால ஒப்பந்த அடிப்படையிலான நியமனமாவதுடன் பணியாற்றல் மதிப்பீடு திருப்திகரமாகும் பட்சத்தில் ஒப்பந்த நியமனம் வருடாந்தம் நீடிப்புச் செய்யப்படவும் முடியும். நியமனம் தொடர்பான அனைத்து நிபந்தனைகளும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 01/2016, 01/2016(I) இன் பிரகாரமே அமையும்.

விண்ணப்பப்படிவத்தினை எமது இணையத் தளத்திலிருந்து www.ssdd.lk பதிவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ள முடிவதுடன் விண்ணப்பதாரிகள் தகைமையை உறுதிப்படுத்தும் வகையில் தமது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை கல்வித்தகைமை மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் இணைத்து 04.12.2017 ஆம் திகதிக்கு முன்னராக எமக்கு கிடைக்கத்தக்கவாறு **"மேலதிக செயலாளர், திறன்கள் அபிவிருத்திப் பிரிவு, திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு, 354/2, நிபுணதா பியச, எல்விடிகல மாவத்தை, நாரஹேன்பிட்ட, கொழும்பு-05"** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவும். அரச திணைக்கள, நியதிச்சபை மற்றும் கூட்டுத்தாபன விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தத்தமது நிறுவனத் தலைவரினூடாக அனுப்புதல்வேண்டும்.

**செயலாளர்,**
**திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு, 354/2,**
**நிபுணதா பியச, எல்விடிகல மாவத்தை, நாரஹேன்பிட்ட, கொழும்பு-05.**